மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு ஒன்றிய திமுக சார்பாக கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கியும், வருகிற ஒன்பதாம் தேதி மதுரை வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்து விழாவில் பங்கேற்பது மற்றும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்பது குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமையில், ஒன்றிய செயலாளர் ச.தனசேகர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன், ஒன்றிய செயலாளர் தன்ராஜ், இளைஞர் அணி நிர்வாகிகள் இளங்கோவன், மருதுராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், திரளான பொது உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, புதூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வெம்பூரில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சருமான பெ.கீதாஜீவன் கலந்துகொண்டு கழக வளர்ச்சி பணிகள் குறித்து உரையாற்றினார். மேலும் மாவில்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் எல்லப்பன் தலைமையில் பா.ஜ.க.வைச் சேர்ந்த திருமதி.காளீஸ்வரி மற்றும் திருமதி.வசந்தா தலைமையில் 20க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், புதூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மும்மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை - நா. எழிலன் - கலை கதிரவன் பங்கேற்பு!

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, செப்.7-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் (09.09.2024) திங்கள் கிழமை மாலை 6 மணி அளவில் சூளைமேடு, ஆர்.ஆர். மஹாலில், பகுதி அவைத் தலைவர் புவி.பாலாஜி தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.டி.ஆர். நாதன், டி.ஜோஸ்டானியல், மாவட்டக் கழக நிர்வாகிகள் த. விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின் பாபு, பகுதி கழக நிர்வாகிகள், துணை செயலாளர்கள் என்.பி.இதயத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா. பொன்னம்மாள், பொருளாளர் பா.கமலக்கண்ணன், வட்ட செயலாளர் க.சிட்டி பாபு, வரதை த.பரி, ச. டேவிட் இன்பராஜ், த.குணசேகர், கே.எஸ்.தினேஷ் பிரபு, மு.மோகன்,

மாவட்ட பிரதிநிதிகள் அ.குப்பன், எஸ்.பார்த்திபன், த.ஐசென்ட், என்.இ.சரவணன், கோ.தட்சிணாமூர்த்தி, பா.சுரேஷ், எம்.டி.ஆர்.புகழ், ஆர்.சீனிவாசன், வி.என்.பாபு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.பிரகாஷ், வி.ஆர்.விஜய், மு. சீனிவாசன், திருமலை, பொன்னுரங்கம், எம்.டி.ஆர்.சாரதி (எ) மணிமாறன், ச.அசோக்குமார், யோகேஸ்வரி சுந்தரேசன், எலிசபெத் அகஸ்டின் எம்.சி., டி.கே.லதா பிளாரன்ஸ், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, பி.எஸ்.ராஜா, டாக்டர் ஜீவகன், அய்யநாதன், எஸ்.எச்.ரகமதுல்லா, ஏ.விஜயராஜ், இளம்பாரதி, வே. தேவேந்திரன், கோ.ராஜராஜன், ஜி.வி.சரவணன், சி. கே.ரங்கராஜன், எம்.கே. ஆனந்த், என்.அரவிந்தகுமார்

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் குட்டி (எ) சுப்பிரமணி, என்.மோகனவேல், எம்.ஏ.ஜஸ்டின், ஜே.இருதயநாதன், க.தங்கமணி, கே.எஸ்.கோபி, சி. சியாமளா, எஸ்.கே.கமலக்கண்ணன், அருண்பிலிப்ஸ், ப. கோபாலகிருஷ்ணன், ஏ.குப்புசாமி, டி.ஜி.சுரேந்திரன், கே.எல்.எம்.மணி தீபா, நா.நாகராஜ், பிரசன்னா, திருமுருகன், இர்பானா பேகம், வ.வேல் குமார், தனுஷ்கோடி, ஆதித்தன், ராஜேஷ் குமார், சுரேஷ்

மேலும் 109வது வட்ட நிர்வாகிகள்: ஆ.வெங்கடேசன், சு.சண்முகம், ச.ராசுகுமார், பா.ஜெயராணி, ஆ. ஆரோக்கியதாஸ், ஜி.ஆர். மூர்த்தி, மா.அண்ணாமலை, மோ.தியாகராஜன், மு.முனிரத்தினம்

109 'அ' வட்ட நிர்வாகிகள்: இரா.முத்துக்குமார், ஆ.விஜயகுமார், ஜி.கே. ராஜா, எஸ். மாலா, வா. வாஞ்சிநாதன், சு.நைனியப்பன், ஆர்.நீலகண்டன், என். எஸ்.சுப்பிரமணியன், ஆர். சேகர், கோவிந்தராஜன்

110வது வட்ட நிர்வாகிகள்: சி.சிங்காரமுருகேசன், ஏ.காமேஷ் ராஜ், சே.சந்தூர், வி.குமாரி, நா.சா. பாலு, எஸ்.சந்திரசேகர், மெல்வின் சகாயராஜ், எஸ். சியாமளவண்ணன், அமுதவாணன், எம்.செல்வம்

110 'அ' வட்ட நிர்வாகிகள்: நா.பழனி, இரா.கதிரவன், மு.ச.பரத்குமார், யமுனா வடிவேல், இரா. மணிகண்டன், நா.ராதாகிருஷ்ணன், மு.ஏழுமலை, அ.தனசேகர், கே.வி.எஸ். அபுத்தரன், சே.ரவிக்குமார்

112வது வட்ட நிர்வாகிகள்: எஸ்.மனோகரன், வி. பொன்சீலன், வி.வீரராகவன், எஸ்.பொற்கொடி, வி.ராஜி, ப.சிவக்குமார், எச். சக்கரவர்த்தி, ஏ.ஜான்சன், பா.பாலாஜி, எல்.முருகன்

112 'அ' நிர்வாகிகள்: கு.பாண்டியன், ச.யுவராஜ், எஸ்.மோகன், இ.வசந்தா, இ.கந்தசாமி, த.பூபாலன், சு.நரேந்திரன், என்ட்ரி சாமுவேல், ஆர்.தனசேகர், க. ஜெயக்குமார் மற்றும் இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளுடைய பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 (பாக முகவர்கள்) பி.எல்.சி. (பாக உறுப்பினர்கள்) கழகத் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

பொருள் : கழக ஆக்க பணிகள்

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கையில் கூறியுள்ளார்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில்

சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வுக் கூட்டம்! எஸ். காந்திராஜன் தலைமை!

மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் - கோரிக்கை மனு வழங்கினார்!

நெல்லை.செப்.7.-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 4.9.2024 அன்று சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வு கூட்டம் குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளதை நிறைவேற்றிட பரிந்துரை செய்திட வேண்டி கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது.

கடந்த 2013 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நான் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சராக இருந்தபோது சுமார் 6 ஏக்கரில் 60 லட்சம் மதிப்பீட்டில் மினி விளையாட்டரங்கம் துவங்கப்பட்டது. அதன் பின் மேற்படி விளையாட்டரங் கத்தை எந்தவித பராமரிப்புமின்றி மிகவும் பழுது அடைந்துள்ளது. மேற்படி விளையாட்டரங்கத்திற்கு தேவையான கோரிக்கையை இத்துடன் இணைத்துள்ளேன் எனவே மேலப் பாளையம் மினி விளையாட்டு அரங்கை செப்பனிட்டு தர பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

நான் குடியிருக்கும் 16 வது வார்டு பகுதியில் உழவர் சந்தை உள்ளது. அதே போல் அந்த வளாகத்தில் கண்டிகைபேரி அரசு மருத்துவமனை, முதியோர் இல்லம்,அங்கன்வாடி மையம், பூங்கா என பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லக்கூடிய பகுதியாக உள்ளது. அதைப்போல தற்போது அந்த வளாகம் சுகாதாரமற்ற முறையில் இருந்து வருகிறது.இரவு நேரங்களில் சமூக விரோதிகள் கூடி அசுத்தம் செய்து வருகிறார்கள். மேலும் டவுன் பகுதியில் வாழும் பொதுமக்கள் வாகனங்களை முழுமையாக நிறுத்தி உள்ளனர். அதனால் பொதுமக்கள் சிலர் வருவதற்கு மிகவும் இடையூறாகவும் அச்சப்படும் சூழ்நிலை உள்ளது. அதேபோல் தெரு நாய்கள் தொந்தரவு அதிகமாக உள்ளது.எனவே மேற்படி பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக பராமரித்து உழவர் சந்தையை மேம்படுத்த பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாநகரப் பகுதியில் குடியிருப்புக்கு நடுவில் ஓடக்கூடிய பாளையங்கால்வாய் மற்றும் திருநெல்வேலி கால்வாய் ஆகிய இரண்டும் விவசாயத்துக்காக பயன்படுத்தக்கூடிய கால்வாயாகும். தற்போது அந்த கால்வாயில் பொது மக்கள் குப்பைகளையும், கழிவுகளையும் கொட்டி தண்ணீர் போக்கின்றி அடைப்புகள் ஏற்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது.இதனால் விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே விவசாயிகள் நலன் கருதி நகப்பகுதியில் மட்டும் மேற்படி கால்வாயில் சிமெண்ட் தளம் அமைத்து செப்பனிட்டு தர விவசாயிகள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

பாளை குலவணிகர்புரத்தில் திருச்செந்தூர்நெல்லை ரயில் பாதை குறிப்பிடுகிறது. இந்த ரயில் பாதையை கடந்து தான் திருச்செந்தூர் தூத்துக்குடி இருந்து வரும் அரசு,தனியார் பஸ்கள் அனைத்தும் மத்திய சிறைச்சாலை வழியாக நெல்லை வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையம் செல்ல வேண்டும்.மேலும் பாளையங்கோட்டை ஊருக்கு இருந்து கன்னியாகுமரி, நாகர்கோவில் செல்லும் வாகனங்கள் இந்த ரயில்வே கேட்டை கடந்து தான் செல்ல வேண்டும்.அது மட்டுமல்லாது தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்தும் சேரன்மகாதேவி,அம்பாசமுத்திரம் செல்ல வேண்டிய கனரக வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் இந்த ரயில்வே கேட்டை கடந்துதான் வலப்புறம் திரும்பி மேலப்பாளையம், அம்பை சாலையில் பயணிக்க வேண்டும். பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஆப்ஸ் போடு என அழைக்கப்படுகிறது.

இதனால் முன்னீர்பள்ளம்,கருங்குளம் மேலப்பாளையத்தில் இருந்து பாளையங்கோட்டையில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் தினமும் இந்த ரயில்வே கேட்டை கடந்து தான் பள்ளி கல்லூரிக்கு சென்று வருகின்றனர். திருச்செந்தூர் செல்லும் ரயில் கடந்து செல்லும்போது இந்த ரயில்வே கேட் அடைக்கப்படுவதால் பாளையிலிருந்து செல்லும் வாகனங்களும், அம்பை மேலப்பாளையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் இருந்து தூத்துக்குடி, திருச்செந்தூர் செல்லும் வாகனங்களும் இருபுறமும் நீண்ட தூரம் அணிவகுத்து நிற்கும். கேட் திறக்கப்பட்டதும் இச்சாலையில் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.இதை கருத்தில் கொண்டு கடந்த 20062011 தி.மு.க ஆட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது பாளை குலவணிகர்புரம் ரயில்வே கேட்டில் Y வடிவ மேம்பாலம் அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டது. அதாவது

முருகன்குறிச்சி பாளை பேருந்து நிலையத்தை கடந்து நாகர்கோவில் செல்லும் வாகனங்கள் ரயில்வே கேட்டை கடந்து நேரடியாக பயணிக்கவும் மேலப்பாளையம் வழியாக அம்பாசமுத்திரம் உள்ளிட்ட செல்லும் வாகனங்கள் மேம்பாலத்தில் இருந்து வலது புறம் திரும்பி மேலப்பாளையம், அம்பை சாலையை இணைத்து பயணிக்கும் வகையிலும் ஒய் வடிவ மேம்பாலம் அமைக்க தீர்மானிக்கப் பட்டது.

இந்த மேம்பாலத்திற்கு தற்போதைய முதல்வரும் 2010 ஆம் ஆண்டு துணை முதல்வராக இருந்தபோது அம்பாசமுத்திரத்தில் நடந்த அரசு விழாவில் அடிக்கல் நாட்டினார்கள்.

மேம்பாலம் பணிகள் தொடங்கும் முன்பாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் இந்த பணிகள் கடந்த 10 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டது. 2021ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தமிழ்நாடு முதலமைச்சராக கழக தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதும் பாளை குலவணிகர்புரத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்தது.

இந்நிலையில் பழைய ஒய் வடிவ மேம்பாலம் திட்டத்தை மாற்றிவிட்டு தற்போதைய புதிதாக ரயில்வே கேட்டை கடந்து நேரடியாக புதிய பேருந்து நிலையம்,நாகர்கோவில் செல்லும் வகையில் மேலப்பாளையம், அம்பை சாலையை மறந்து ஒரு வழியாக மட்டும் மேம்பாலத்திற்கு நெடுஞ்சாலை துறையால் திட்டம் தயாரிக்கப்பட்டுள் ளது.

இந்த முறையில் ரயில்வே மேம்பாலம் அமைப்பதால் எந்த வகையிலும் பயன்தராது.கூடுதலாக தான் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும். வரும் காலங்களில் இன்னும் வாகன பெருக்கம் அதிகரிக்கும்.எனவே மேலப்பாளையம், அம்பை சாலையை இணைத்து ஒய் வடிவ மேம்பாலம் அமைக்க, வேண்டுகோள் எழுந்துள்ளது. எனவே மேற்படி கோரிக்கையை பொதுமக்கள் சார்பாக நிறைவேற்றி தர கேட்டுக் கொள்கிறேன்.

மனுவில் இணைத்துள்ள முறப்பநாடு குடிநீர் திட்டங்கள் கோரிக்கையானது நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. இதனை உடனடியாக நிறைவேற்றி தர பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், செப். 7 -

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக "பொது உறுப்பினர்கள் கூட்டம்" 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் தாராபுரம், ஸ்ரீ கோகுல் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகிய எனது முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச்செயலாளர், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

அதுசமயம், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், சார்பு அணிகளின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், கழகத்தின் செயல் வீரர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.கழக முப்பெரும் விழா குறித்து. 2.நவம்பர் 27 கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து. 3. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் போன்ற பணிகள் குறித்து. 4.கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் இல. பத்மநாபன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழக தலைமைக் கழக பேச்சாளர் வேடசந்தூர் முருகவேல் – இலக்கியா திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி சிவா எம்.பி . நடத்தி வைத்தார். உடன் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் உட்பட பலர் உள்ளனர்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன்,த. விஸ்வநாதன் சிறப்புரை !

177 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் !

அரிமா சு.சேகர் முன்னிலை! பொ.த. மதிவாணன் அறிக்கை !

சென்னை செப்:7

இதுகுறித்து 177 வது வட்டக் கழக செயலாளர் பொ.த.மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி பகுதி 177 வட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 9.9.2024 திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் கபாலி திருமண மண்டபம்,காந்தி சாலை, வேளச்சேரியில் நடைபெறுகிறது. கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் மு. ஜெயச்சந்திரன் தலைமை ஏற்கிறார்.

ஆர். ரமேஷ், நவபாரதி எத்திராஜ்,சி.வி. இளங்கோவன்,எஸ். புகழேந்தி செல்வன்,சி. பி.கார்த்திக்,டி. சதீஷ்,வி.சிவசாமி, ஏ. வேல்முருகன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பகுதி கழகச் செயலாளர் அரிமா. சு. சேகர், தேர்தல் பணிக்குழு செயலாளர் பெ.மணிமாறன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம்.சி. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மாவட்ட பொருளாளர் எஸ். பாஸ்கரன் எம்.சி, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கழக த.ரமேஷ்,வழக்கறிஞர் அணி அமைப்பாளர் த. ஜெகதீசன்,அயலக அணி அமைப்பாளர் முகேஷ் கண்ணா, தலைமை கழக பேச்சாளர் நெல்லை மணி,

வேளச்சேரி மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் சி. பழனி,பொ.த. எழில்வாணன்,வி.ஜி. மோகன்,எம். எசங்கர்,சே. மைதிலி,ந. டில்லி குமார், என்.வெங்கடேசன், கடப்பா ராஜா,மலரவன், க.பத்மராஜன்,ஜே. கார்த்திகேயன்,டீ.லதா,பி. பரிமளம்,எம்.டி.கே. திலீப் குமார், மு.எத்திராஜ்,டி.தாமஸ், என். தேவேந்திரன்,எம். எஸ். விஸ்வா, எஸ். முத்துகிருஷ்ணன்,பி. எல். செல்வராஜ்,ஜே. யுவராஜ்,எஸ். குழந்தை வேலு, வி.என். சண்முகசுந்தரம், ஆர். வினோத்,டி. சிவசண்முகசுந்தரம்,எல்.பாபு,எஸ். சரவணன்,ஆர்.தட்சிணாமூர்த்தி,ஜான் பிரட்ரிக்,சி. பார்த்திபன், சி.தியாகராஜன்,ஏ. முரளிதரன்,டி. அன்பழகன்,மு. சந்தோஷ், கே.தாஸ்,வி ரவிக்குமார், டிஎஸ்டி முருகன்,கே. செங்குட்டுவன்,எம். தியாகராஜன், ஏ. பூவரசன், உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் உள்ளிட்டோர் பங்கேற்குமாறு வட்டச்செயலாளர் பொ.த. மதிவாணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வட்ட துணைச் செயலாளர் வி.கணேஷ் குமார் நன்றி உரையாற்றுகிறார்.